**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009**

**HELD IN APRIL – 2009**

## ECS 1.21 - INTRODUCTION TO MACRO ECONOMICS

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) பேரினப் பொருளியல் என்பது பொருளாதாரத்தின் மொத்த ஆய்வினைக் குறிப்பிடுகின்றது" இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) இரண்டு துறை பொருளாதார மாதிரியொன்றில் தேசிய உற்பத்தியானது தேசிய வருமானத்திற்கு எவ்வாறு சமப்படுகின்றது என்பதனை தேசிய வருமான வட்டப் பாய்ச்சல் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) தேசிய வருமான மாதிரியில் வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

02. கிளிப்புகள், பேனாக்கள் மற்றும் பந்துகள் ஆகிய மூன்று வகைப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற பொருளாதாரமொன்றினை கருத்திற்கொள்க. 2000ம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி மற்றும் விலை தொடர்பான தரவுகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| பொருட்கள் | தொகை | விலைகள் |
|---|---|---|
| Clips | 3,000 | Rs 2 per Clip |
| Pens | 5,000 | Rs 3 per Pen |
| Balls | 7,000 | Rs 4 per Ball |

நடைமுறையாண்டிற்கான உற்பத்தி மற்றும் விலை தொடர்பான தரவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| பொருட்கள் | தொகை | விலைகள் |
|---|---|---|
| Clips | 4,000 | Rs 3 per Clip |
| Pens | 14,000 | Rs 2 per Pen |
| Balls | 32,000 | Rs 5 per Ball |

(அ) நடைமுறை மற்றும் அடியாண்டிற்கான பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் காண்க. அடியாண்டிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) நடைமுறை மற்றும் அடியாண்டிற்கான மெய்ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் காண்க. அடியாண்டிலிருந்து நடைமுறையாண்டு வரை மெய்ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எவ்வளவு சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்பதனைக் காண்க.

(05 புள்ளிகள்)

(இ) நடைமுறை மற்றும் அடியாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கியைக் காண்க. அடியாண்டிலிருந்து நடைமுறையாண்டு வரை விலை மட்டத்தில் ஏற்பட்ட சதவீத மாற்றம் யாது?

(05 புள்ளிகள்)

(ஈ) குறித்த பொருளாதாரத்தில் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட சதவீத அதிகரிப்பு ஆனது விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏற்பட்ட தாக்கம் என ஏற்றுக்கொள்கிறீரா? சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

03. (அ) வணிக வங்கியொன்றின் தொழிற்பாடுகள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையினது பொருளாதாரத்தில் மத்திய வங்கியின் முக்கிய வகிபாங்குகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

04. சமகால உலக நிதிநெருக்கடியானது இலங்கையின் பேரினப் பொருளாதார மாறிகளில் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆய்வு செய்க.

(20 புள்ளிகள்)

05. (அ) பணம் என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்தி, நவீன பொருளாதார மொன்றில் அதனது தொழிற்பாடுகளை விபரிக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) பணநிரம்பலானது உயர்வலுப்பணம், நாணய வைப்பு விகிதம் மற்றும் காசுவைப்பு விகிதம் என்பனவற்றில் எவ்வாறு தங்கியுள்ளது என்பதனை விளக்குக.

(15 புள்ளிகள்)

06. நாணய நடைமுறைக் கொள்கையின் வெற்றியானது இறைக்கொள்கையில் தங்கியுள்ளது. இக்கூற்றினை விமர்சன ரீதியாக பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

07. திரவத்தேர்வு என்பதனால் கருதப்படுவது யாது? கெயின்சினது வட்டி தொடர்பான திரவத்தேர்வுக் கோட்பாட்டினை விளக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு (02) விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) விலைச் சுட்டெண் மற்றும் பணவீக்கம்

(ஆ) வேலையின்மை மற்றும் நிறைதொழில் மட்டம்

(இ) பணத்திற்கான கேள்வி மற்றும் பணப்பெருக்கி

(ஈ) கேள்வித் தூண்டல் பணவீக்கம் மற்றும் செலவுத் தூண்டல் பணவீக்கம்.

(தலா 10 புள்ளிகள்)

***